பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 11 2024 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரசியல் சாசன தினத்தையொட்டி, புதுதில்லியில் உச்சநீதிமன்றம் சார்பில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

2. ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டிற்காக தொழில்நுட்பத்தை அரசு பயன்படுத்தி வருவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

3. மகளிருக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க அனைவரும் உறுதியேற்று செயலாற்ற வேண்டும் என மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி வலியுறுத்தியுள்ளார்.

4. தேசிய பால் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, பால்வளத்துறையில் சிறந்து விளங்கியவர்களுக்கான விருதுகளை அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

5. சையது மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டி லக்னோவில் இன்று தொடங்குகிறது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

அரசியல் சாசன தினத்தையொட்டி, புதுதில்லியில் உச்சநீதிமன்றம் சார்பில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் நீதித்துறையின் ஆண்டு அறிக்கையை வெளியிட்டு அவர் உரையாற்ற உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மேக்வால், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சஞ்சீவ் கண்ணா மற்றும் நீதிபதிகள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டிற்காக தொழில்நுட்பத்தை அரசு பயன்படுத்தி வருவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டுக்கான **'The Teacher App'** என்ற செயலியை புதுதில்லியில் நேற்று அவர் அறிமுகம் செய்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த செயலி ஆசிரியர்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று கூறினார்.

புதிய கல்விக்கொள்கையின் அடிப்படையில் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும், இது மாணவர்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<>>>>

மகளிருக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க அனைவரும் உறுதியேற்று செயலாற்ற வேண்டும் என மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி வலியுறுத்தியுள்ளார்.

பாலின அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான தேசிய இயக்கத்தை புதுதில்லியில் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

ஊரக வளர்ச்சி அமைச்சகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இந்த இயக்கம், டிசம்பர் 10ஆம் தேதி வரை நாடு தழுவிய அளவில் செயல்படுத்தப்படுகிறது.

நிகழ்ச்சியில் பேசிய திருமதி அன்னபூர்ணா தேவி, மகளிருக்கு அதிகாரமளிக்கும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ்சிங் சௌஹான், மகளிரின் பங்களிப்பு இல்லாமல் முழுமையான வளர்ச்சியை எட்ட முடியாது என்று குறிப்பிட்டார்.

இதனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தேசிய பால் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

வெண்மைப் புரட்சியின் தந்தை என்று அழைக்கப்படும் வர்கீஸ் குரியனின் பிறந்த தினமான நவம்பர் 26ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் தேசிய பால் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த தினத்தையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் பால்வளத்துறையில் சிறந்து விளங்கியவர்களுக்கான தேசிய கோபால்ரத்னா விருதுகளை அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் இன்று வழங்குகிறார்.

<<<<>>>>

2036ஆம் ஆண்டில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளை நடத்த இந்தியா ஆர்வத்துடன் உள்ளதாக மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

உலக தடகள அமைப்பின் தலைவரும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி உறுப்பினருமான திரு. லார்ட் செபாஸ்டியன் கோ தலைமையிலான குழுவினருடன் புதுதில்லியில் நேற்று அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

விளையாட்டுத் துறையில் இந்தியா தற்போது அதிக சாதனைகளைப் படைத்து வருவதாக அமைச்சர் கூறினார்.

தேசிய விளையாட்டுக் கொள்கை உருவாக்கப்பட்டு வருவது குறித்தும், விளையாட்டுகளை அடித்தள அளவில் கொண்டு சென்று அதிக சாதனையாளர்களை உருவாக்கும் முயற்சிகள் குறித்தும் அந்த குழுவினருடன் தாம் ஆலோசனை நடத்தியதாக திரு. மன்சுக் மாண்டவியா சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டில் ஆண்டுக்கு 6 சதவீதம் என்ற அடிப்படையில் புலிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனைத் தெரிவித்துள்ள அவர், 2014-ம் ஆண்டில் நாட்டில் மொத்தம் 2 ஆயிரத்து 967 புலிகள் இருந்ததாக கூறினார்.

2022-ம் ஆண்டு புலிகள் கணக்கெடுப்பில் இந்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 682 ஆக அதிகரித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் மூலம், புலிகள் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துள்ளதாகவும் திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

மக்கள் அனைவருக்கும் செய்தி மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் பிரசார் பாரதி செயல்பட்டு வருவதாக அதன் தலைமைச் செயல் அதிகாரி திரு கௌரவ் திவேதி கூறியுள்ளார்.

பிரசார் பாரதியின் புதிய செயலியான 'வேவ்ஸ்' குறித்து செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில், பாரம்பரிய ஊடகங்களுடன் டிஜிட்டல் தளங்கள் மூலமும் மக்களுக்கு சேவை வழங்கும் நடவடிக்கையாக இந்த செயலி தொடங்கப்பட்டுள்ளது என்றார்.

கிராமப்புறங்களிலும் தற்போது இணையதள பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில் பிரசார் பாரதியின் இந்த 'வேவ்ஸ்' செயலியின் சேவை அதிக மக்களை சென்றடையும் என்று திரு கௌரவ் திவேதி தெரிவித்தார்.

<<<<>>>>

ஆந்திராவில் அனைத்து வீடுகள் மற்றும் அலுவலகங்களில் சூரிய மின்சக்திக் கட்டமைப்பை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

இது தொடர்பாக விஜயவாடாவில் மின்துறை அதிகாரிகள் பங்கேற்ற ஆய்வுக் கூட்டத்தில் நேற்று அவர் உரையாற்றினார்.

மாநிலத்தை சூரிய மின்சக்தி மையமாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

சூரிய சக்தியைப் பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்து அதிகாரிகள் மக்களுக்கு விரிவாக விளக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பிரதமரின் சூரிய மின்சக்தி திட்டம் போன்ற மத்திய அரசின் திட்டங்கள் குறித்தும் மக்களுக்கு அதிக அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என திரு சந்திரபாபு நாயுடு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேச மாநிலத்தில் அதிக முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் மாநில அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் கூறியுள்ளார்.

முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி நாடுகளில் அவர் 6 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

லண்டனில் இந்திய சமுதாயத்தினரிடையே நேற்று பேசிய அவர், பிப்ரவரி மாதம் போபாலில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் உச்சி மாநாடு குறித்து எடுத்துரைத்தார்.

இன்று லண்டனில் இங்கிலாந்தைச் சேர்ந்த 120-க்கும் மேற்பட்ட தொழில்துறையினருடன் அவர் ஆலோசனை நடத்த உள்ளதாகவும், இதையடுத்து ஜெர்மனி செல்லும் அவர் அந்நாட்டுத் தொழில்துறை பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச உள்ளதாகவும் மத்தியப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

போதைப்பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஆன்மீக அமைப்புகள் அதிக பங்காற்ற வேண்டும் என நாகாலாந்து ஆளுநர் திரு இல. கணேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோஹிமாவில் பிரம்ம குமாரிகள் அமைப்பு சார்பில் நடைபெற்ற போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் பேரணியை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

பிரம்ம குமாரிகள் அமைப்பின் இந்தப் பணிக்குப் பாராட்டுத் தெரிவித்த அவர், போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக அரசுடன் பிற அமைப்புகளும் இணைந்து செயல்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

போதைப்பொருள் பயன்பாடு தனிப்பட்ட பிரச்சினை மட்டுமல்ல எனவும் அது ஒட்டுமொத்த சமூகத்தையும், நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கும் சவால் என்றும் அவர் கூறினார்.

இளைஞர்களிடையே இது தொடர்பாக மேலும் அதிக அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என திரு இல கணேசன் வலியுறுத்தினார்.

<<<<>>>>

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, கடலோர ஆந்திரா உள்ளிட்ட பகுதிகளில் சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசத்தில் காலை மற்றும் இரவு நேரங்களில் அடர்த்தியான மூடுபனி நிலவக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடமேற்குப் பகுதிகளிலும் மகாராஷ்டிராவிலும் அடுத்த சில நாட்களுக்கு குறைந்தபட்ச வெப்பநிலை படிப்படியாக 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் குறையக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

தில்லி தேசிய தலைநகரப் பகுதியில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பிற கல்வி நிறுவனங்களில் நேரடி வகுப்புகளை நடத்த அனுமதிப்பது குறித்து பரிசீலிக்குமாறு காற்று தர மேலாண்மை ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடுமையான காற்று மாசுபாடு காரணமாக கடந்த வாரம் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இது தொடர்பாக இன்றைய தினத்துக்குள் முடிவெடுக்குமாறு காற்றுத் தர மேலாண்மை ஆணையத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

சையது மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டி லக்னோவில் இன்று தொடங்குகிறது.

டிசம்பர் ஒன்றாம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் இந்தியா, சீனா, தாய்லாந்து உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டி மஸ்கட்டில் இன்று தொடங்குகிறது.

இதில் இந்தியா, ஜப்பான், கொரியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கின்றன.

நாளை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் முதல் சுற்று ஆட்டத்தில் சீனாவின் டிங் லிரென், இந்தியாவின் குகேஷை வென்றார்.

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் ஒடிசா அணி ஹைதராபாத் அணியை வென்றது.

ஹைதராபாதில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஒடிசா அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மும்பையில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி பஞ்சைபை எதிர்கொள்கிறது.

<<<<The End>>>>